# திருமலையில் இரு அதிகாரிகள் 6 படையினர் பலி!

[திருமலை]

திருகோணமலையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலொன்றில் இரு அதிகாரிகள் உட்பட எட்டுப்படையினர் பலியானார்கள். பத்துப்பேர் படுகாயமடைந்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 20 ஷவ்வால் 17 இதழ் 82

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-5-1991

3-5-1991

## கிழக்கிலும் புலிகள் வேரூன்றி இருக்கிறார்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் ஒதுக்குப்புறங்களில் இன்னமும் வேரூன்றியிருப்பதால் ஜூன் மாதத்திற்குள் இப்பகுதியில் இராணுவ நடவடிக்கையை பூர்த்தி செய்ய முடியாது என்று இராணுவப் பார்வையாளர்கள் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

## 1282 படையினர் மரணம் 480 பேரை காணவில்லை!

[கொழும்பு]

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற சண்டையில் 1282 இராணுவத்தினர் பலியானதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் - இராணுவம் வவுனியாவில் மீண்டும் மோதல்

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் - இராணுவத்தினருக்குமிடையில் மீண்டும் புதிதாக மோதல்கள் வெடித்தன.

நேற்றுக்காலை பத்துமணியிலிருந்து இப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டு விமானப்படையின் உதவியுடன் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் நேற்று தாக்குதலை நடத்தினார்கள். இரு இராணுவ முகாமிலிருந்து பூந்தோட்டம், தாண்டிக்குளம் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நேற்றுக் காலை விமானப்படையின் உதவியுடன் இரு அணிகளாக வெளியேறிய படையினர் சாந்தசோலைக்கு முன்னேறி

விமானங்களின் உதவியுடன் வெளியேறிய இராணுவத்தினரை இடைமறித்து விடுதலைப் புலிகள் கடுமையான

(4-ம் பக்கம் பார்க்க)

## பல கட்டிடங்கள் குண்டுவைத்து தகர்ப்பு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் சுருவில் வீதியிலுள்ள தலுவில் சந்தனமாதா ஆலய பகுதியிலுள்ள வீடு ஒன்றில் முகாமிட்டுள்ளனர்.

இம்முகாமிற்கருகிலுள்ள வீடு

(4-ம் பக்கம் பார்க்க)

## டீசல் இல்லாமையால் நீர் விநியோகம் நிறுத்தம்!

(மானிப்பாய்)

நெடுந்தீவு பிரதேச சபைக்கு டீசல் வழங்காததினால் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படும் நீர்விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் தண்ணீரின்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நீர் விநியோகத்திற்கு நாளொன்றுக்கு இரண்டு லீற்றர் டீசல் தேவைப்படுவதாகவும் தற்போது இது கையிருப்பில் இல்லாததினால் இப்பகுதி மக்களுக்கான நீர்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. வீதிகளில் தலையற்ற சடலங்கள் அதிகரிப்பு

(மட்டுநகர்)

தலைகள் துண்டிக்கப்பட்ட தமிழர்களின் சடலங்கள் மட்டுநகரில் தினமும் வீசப்பட்டுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமட்டும் 4 சடலங்கள் இவ்வாறு வீசப்பட்டிருந்தன. கடந்த சில நாட்களுக்கு முன் 12 சடலங்கள் அநாதரவான நிலையில் வீதியில் கிடந்தன.

தலைகள் துண்டிக்கப்பட்ட சடலங்களின் தொகை இந் நகர்ப்பகுதியில் அதிகரித்து வருவதால் பொதுமக்கள்மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதுடன் இங்குள்ள வர்த்தக நிலையங்கள், மற்றும் பொது நிறுவனங்கள் யாவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## "இனப் பிரச்சனைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு காண முடியாது"

[கொழும்பு]

இனப்பிரச்சனைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியாது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கூறினார்.

நேற்றுமுன்தினம் காலிமுகத்திடலில் நடைபெற்றமேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில், சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண அரசாங்கம் எப்பொழுதும் ஆயத்தமாகவே உள்ளது. இதற்கான அடிப்படை என்ன என்பதை நாம் ஏற்கனவே அறிவித்து விட்டோம் என்றார். (பூ)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

மார்ச் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் உரியவர்களுக்கு யாழ். செயலகத்திலிருந்து நேற்று தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது. (71)

## பொதுமக்கள் வீடுகளில் படையினர் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், அங்குள்ள பொதுமக்களின் வீடுகளை சூறையாடுவதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்

கடற்கரையை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகளிலேயே பெறுமதிமிக்க பொருட்களை இராணுவத்தினர் திருடுவதாகக் கூறப்படுகின்றது.

திருடப்படும் பொருட்களை வீடுகளின் கதவுகளை உடைத்து அதில் பாரிய பெட்டிகளைச் செய்து அதற்குள் பொருட்களை வைத்து தமது சொந்த வீட்டு விலாசத்தை அதில் எழுதி விடுவதாகவும் சிலர் தமதுபெயர் பொறித்த 'ஸ்ரிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## பச்சைநூல் முகாமிலிருந்து 25 தமிழர்கள் கைது

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பச்சைநூல் அகதி முகாமிலிருந்த இருபத்தைந்து தமிழர்கள் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் ஏனையவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரையும் விபரம் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை மீண்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

## விரைவில் 38ம் கட்ட உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்தில் 38ம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் விரைவில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இந்த உணவுப் பொருள்களை இம்மாதம் 10ம் திகதிக்குமுன் யாழ். மாவட்டத்திலுள்ள சகலருக்கும் விநியோகிக்கப் படவேண்டுமென்று ப. நோ. கூ. சங்கங்களுக்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர்

[4ம் பக்கம் பார்க்க)

## "அரசு - புலிகள் மீண்டும் பேச்சு நடத்தவேண்டும்"

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்" என்று கிராமிய கைத்தொழில் சுற்றுலாத்துறை அமைச்சர் காலிமுகமேதினக்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### காணவில்லை

செ. வசந்தகுமாரி என்பவரை 28-04-91 பின்னேரம் முதல் காணவில்லை. கடைசியாக நீலச்சட்டையும், காலில் நீல நிற பாட்டாவும் அணிந்துள்ளார். வயது 12, நிறம் கறுப்பு உயரம் 3 அடி. தலைமுடி கட்டையாக வெட்டியுள்ளார். இவரைக் கண்டவர்கள். மரு ரெஜீனு 'திருப்பதி'' இல. 6, கதிட்ரல்ரோட் யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தகவல் தரவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும்;

(சி-1270)

### மலிவு 15 வரை மட்டும்

மீரா வெளியீடுகள் 140/-வுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது: துர்க்கா ஸ்ரேசனேரிஸ் சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகலபுத்தகசாலைகளிலும். (சி-4695)

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

28-04-91ம் திகதி பரீட்சை (முதலாவது) 05-05-91 ஞாயிறு மு. ப 8-00, மு. ப. 10-30 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் பி. ப. 4-00 மணிக்கு மக்கள் வைத்தியசாலை முன்பாக குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியிலும் நடைபெறும். ஆண்டு 4 பரீட்சை 12-05-91 ஞாயிறு மு.ப. 8-00, பி.ப 1-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும்:

(சி-4702)

### பழைய புத்தகசாலை இடமாற்றம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், சஞ்சிகைகள், போத்தல், பித்தளை, செம்பு, கோழித்தீன் பைகள் வாங்கப்படும் விற்கப்படும் புதிய விலாசம்: சேனுதிராசா 108, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்: [சி-4676]

### சோபிதா புத்தகசாலை

யாழ். நகரில் நியாய விலைக்கு அப்பியாசக்கொப்பிகள், பாடநூல்கள், பாடசாலை உபகரணங்கள், மீரா வெளியீடுகள் அனைத்துக்கும் சிறந்த ஸ்தாபனம் சோபிதா புத்தகசாலை, 363 கே. கே. எஸ். வீதி (முட்டாசுக்கடைச் சந்தி), யாழ்ப்பாணம்,

(சி 4670)

## 2834பேர் போட்டி

(சென்னை)

தமிழ் நாட்டின் 234 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் 2834 பேர் போட்டியிடுகிறார்கள்.

சென்னை அண்ணா மாவட்டத்தில் மட்டும் 422 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் [அ]

## சனசமூக நிலையங்களுக்கு மீண்டும் நன்கொடைப் பணம் வழங்கப்படும்

(உடுவில்)

உள்ளூராட்சிமன்றங்களால் சன சமூக நிலையங்களுக்கு வருடாவருடம் வழங்கப்படும் நன்கொடைகள் மீண்டும் வழங்கப்படவுள்ளன.

1989 - 90ம் ஆண்டுகளுக்கான நன்கொடைப் பணத்தை சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்கள் தத்தமது உள்ளூராட்சி மன்றங்களில் சென்று மே மாதம் 15-ம் திகதிக்கு முன்பதாக பெற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மே 15-ம் திகதிக்குப் பின்னர் நன்கொடைப்பணம் வழங்கப் படமாட்டாது.

சனசமூக நிலையங்களுக்கான 89 90-ம் ஆண்டு நன்கொடைப்பணம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு 1989ம் ஆண்டு எந்தவிதமான ஆவணங்களை

(4-ம் பக்கம் பார்க்க)

### உதவி அரச அதிபர் பிரிவு:

## மென்பந்து சுற்றுப் போட்டி

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டத்தில் வெற்றியீட்டிய கழகங்களுக்கிடையே மென்பந்து சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

இப்போட்டியில் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு 1ம் இடத்தையும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 2ம் இடத்தையும் பெற்றுக் கொண்டது

யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக பொது சனதொடர்பு அதிகாரியும், யாழ். உதவி அரசாங்க அதிபருமான திரு. பி.ஐ நித்தியராஜ் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (71)

## வாழ்க்கைத்திறன் கல்வி பாடசாலைகள் அதிகரிப்பு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு வாழ்க்கைத்திறன் கல்வி போதனையை ஆரம்பிக்கக்கூடிய ஐந்து பாடசாலைகளின் பெயர்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு வாழ்க்கைத்திறன் பாடக்கல்வி அதிகாரி திரு எஸ் சுப்பிரமணியம் கோட்டக்கல்வி கல்வி அதிகாரிகளைக்கேட்டுள்ளார்,

1989ம் ஆண்டு முதல் யாழ்ப்பாண பாடசாலைகளில் பிரதி வருடமும் 40 பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் பாடம் அறிமுகப்படுத்தப் பட்டு வருகின்றது.

1992ம் ஆண்டில் மேலும் 40 பாடசாலைகளில்இப்பாடத்தினை போதிப்பதற்கு ஒவ்வொரு கோட்டத்திலும் இருந்து ஆகக்கூடியது ஐந்து பாடசாலைகளை தெரிவுசெய்து அனுப்பி வைக்குமாறு திரு சுப்பிரமணியம் கோட்டக் கல்வி அதிகாரிகளை கேட்டுள்ளார்.

வாழ்க்கைத்திறன் பாடம் பாடசாலைகளில் ஆண்டு 7-ல் படிலும் மாணவர்களில் இருந்து அறிமுகப்படுத்தப் பட்டு வருகின்றது. (1o9)

### செய்திப் பத்திரிகை அளவில் வாக்குச்சீட்டுக்கள்

(சென்னை)

எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தலுக்கு செய்திப்பத்திரிகை அளவு வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப்படவுள்ளன.

அதிகப்படியான வேட்பாளர்கள் போட்டியிடுவதே இதற்கு காரணமாகும்.

அறவக்குறுச்சி தொகுதியில் 249 பேரும் பன்னிர்பட்டி தொகுதியில் 264பேரும் போட்டியிடுகிறார்கள்.

இந்த வாக்குச்சீட்டுகளை போடவென 1000 வாக்குப் பெட்டிகள் பிரத்தியேகமாக செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல்களை தமிழ்நாடு தேர்தல் அதிகாரி திரு:ரகுபதி தெரிவித்தார். (பூ)

## திருமலையில் கடும் மோதல் நாலு படையினர் பலி

(திருமலை)

திருமலை தம்பலகாமத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற கடும் மோதலில் 4 படையினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இப்பகுதியில் 6 முகாம்களை சேர்ந்த 600 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முற்பட்டபோது புலிகள் கடும் எதிர் தாக்குதலை மேற்கொண்டனர்.

குரங்குப்பாலம், பாலம் போட்டாறு, வேப்பங்குளம், 10-ம் கட்டை, பன்மதவாச்சி, கடவானை ஆகிய இராணுவ முகாம்களை சேர்ந்த இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முற்பட்டபோதே மோதல் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (க-சி)

### நேபாளத்தில் தேர்தல்

(காட்மண்டு)

நேபாளத்தில் இம்மாதம் 12ம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில்1 கோடியே 10 லட்சம் பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாக தேர்தல் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பத்மநாதன் மதுரம்

தோற்றம்: 20-1-1946 அழிப்பு: 3-4-1991

இல்லத்தில் அன்பொலியில் திகழ்ந்து
பாசத்தின் உறைவிடமாய் விளங்கி
அணையாத தீபமாயிருந்த உத்தன்
நிலையுணராச் சிப் ராயின் வேட்டில்
துடித்துத் துவண்டு உயிர்நீத்த செய்தியன்றோ
எங்களைத் தாங்கா துயர்தனில் ஆழவிட்டு
இதயங்களை உருக்கிடும் இவ்வேளையில்
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

03-05-1991 வெள்ளிக்கிழமைமேற்படி அமரரின் அந்தியேட்டிகிரியைகளும் வீட்டுக் கிருத்தியங்களும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருவதுடன் அனைவரும் வந்து கலந்து கொள்ளும்படியும் கேட்கின்றோம்;

இவ்வண்ணம்

மீனாட்சி சுந்தரம் பத்மநாதன் (கணவர்)

பிள்ளைகள்: செல்வன் சிறீஜெகன்

செல்வன் சிறீசுதன்

வாசிகசாலை வீதி,
ஏழாலை மத்தி,
ஏழாலை;

(சி 4699)

## இராசி பலன்

03-05-1991

வெள்ளிக்கிழமை

சதுர்த்தி மு. ப. 9-00வரை. மூலம் மு. இ. 10-34 வரை: அமிர்தசித்தயோகம்

இராகுகாலம் காலை 10-26 முதல் 11-56 வரை.

சுபநேரம் காலை 5-56 முதல் 7-26 வரை.

மேடம்- காரிய தாமதம், கவனக்குறைவு, பணவிரயம்:

இடபம்- கருத்து முரண்பாடு, குடும்பபகை, அலைச்சல்.

மிதுனம்- புத்திரர்பெருமை, தொழில்லாபம், பணவரவு

கடகம்- குடும்ப மகிழ்ச்சி, தூரத்து உறவு, உல்லாசப் பயணம்

சிங்கம்- பகைவர் தொல்லை அதிஷ்டக்குறைவு, மறதி

கன்னி- தொழில் பாதிப்பு, வசதியின்மை, கடிதத் தொல்லை.

துலாம்- புதிய ஸ்தானம், வெற்றிவாய்ப்பு, இனசன உதவி.

விருச்சிகம்- வாக்குக்கலகம், சினேகிதர் தொல்லை, உடல் உபாதை.

தனுசு- குடும்பசுகம், வழி திருத்துதல், கடிதவெற்றி

மகரம்- ஏமாற்றம், குடும்ப பிரிவு தொழில்கஷ்டம்

கும்பம்: வேலையாள் சகாயம், பணப்புழக்கம், பாராட்டு

மீனம்- பிரச்சனைக்கு தீர்வு. மனவிரக்தி, தொழில்லாபம்

ஜோஸ்யர்

## தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடம்

### கணக்கு லிகிதர்

வயது எல்லை: 25 — 45

தகைமை: கணக்கு துறையில் குறைந்தது 5வருட அனுபவம் இருத்தல் வேண்டும்,

### நிர்வாக உத்தியோகத்தர்

தகைமை; நிர்வாகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

(எ1268)

## தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

[1] வயது எல்லை: 18 வயதுமுதல் 30 வயதுவரை
[2] உயரம்: 5 அடி 6 அங்குலம்
[3] கல்வித்தகைமை: எட்டாம் வகுப்புமுதல் க. பொ. த. [சாதாரணம்] க. பொ. த.[உயர்தரம்] வரை.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 07-05-91 க்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமூகமளிக்கவும்:

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

[எ1267]

# உலக வரலாற்றில் பெரும் சோகம்

# பங்களாதேஷில் கோரப்புயல்; 1லட்சம் பேர்பலி

## பலலட்சம்பேரை காணவில்லை

(டாக்கா)

பங்களாதேஷில் கடந்த திங்கள் எழுந்த அகோரப் புயலிலும், வெள்ளப்பெருக்கிலும் சிக்கி ஒரு லட்சம் பேர் வரை பலியானதாகதெரிவிக்கப்படுகிறது. பல லட்சம் பேர் காணமல் போய்விட்டனர், பல நகரங்கள் நீரினுள் மூழ்கிவிட்டன.

கடந்த திங்கள் நண்பகல் ஆரம்பமான அகோரப்புயலே இவ்வளவு அனர்த்தங்களையும் ஏற்படுத்தியுள்ளது புயலை அடுத்து நாடு முழுவதும் பெரும் வெள்ளப்பெருக்கும், கடல்கொந்தளிப்பும் ஏற்பட்டது இவற்றில் மாத்திரம் 50,000 பேர் வரை பலியானதாகவும்தெரிவிக்கப்படுகிறது;

### இரு பகுதியில் 33,000 பேர் பலி!

'சிட்டகொங்' பகுதியே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி பெருமளவு நீரினுள் மூழ்கிவிட்டது. இங்கு மாத்திரம் 25,000பேர் பலியாகியுள்ளனர். 'குர்துப்தியா' மாவட்டத்தில் 8,000 பேர் பலியாகியுள்ளனர்:

பல மாவட்டங்களும் பெருமளவு நீரினுள்மூழ்கிவிட்டன. தொலைத்தொடர்பு, போக்குவரத்து எதுவும் இல்லை. தலா 1,500 பயணிகளுடன் சென்ற 3 ரயில்கள் 27 அடி நீரினுள் மூழ்கிவிட்டன. இதிலிருந்த அனைவரும் பலியாகிவிட்டனராம்.

### நாட்டினுள் கடல் புகுந்தது

கடற்பகுதியில் எழுந்த 22 அடி உயர அலைகள் நாட்டினுள் புகுந்து பெருமளவு மக்களை இழுத்துச் சென்றுள்ளது. பல நதிகள் வெள்ளப்பெருக்கால் உடைப்பெடுத்து ஓடுகிறது; இதில் பலர் பலியாகியுள்ளனர்.

பல லட்சம் பேர் வீடுவாசல்களை இழந்து சொல்ல முடியாத துயரில் சிக்கியுள்ளனர். அகதி முகாம்களையோ, புனர்வாழ்வு நிலையங்களையோ ஏற்படுத்த முடியாததொரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாம்.

### 5,000 சடலங்கள் மீட்பு

இதுவரை இத்துயரில் பலியானவர்களில் 5,000 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணியில் முப்படைகளும் ஈடுபட்டுள்ளன. சடலங்களை மீட்கும் பணி சில வாரங்கள் நீடிக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்டோர் காணமற்போய்விட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உதவிப் பணிகளில் ஹெலிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் உதவிப்பணியில் ஈடுபட்டுள்ளன.

### உதவிப்பணி தொடர்கிறது

ஹெலிகொப்டர் ஒன்றில் மீட்புப்பணியில் ஈடுபட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தாம் கண்ட துயர்மிகு சம்பவங்களைக் கூறியுள்ளார். ஓரிடத்தில் 500க்கு மேற்பட்டவர்கள் மலைப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கில் சிக்கி அள்ளப்பட்டு பல அடி ஆழமுள்ள பள்ளத்தில் வீழ்ந்ததைக் கண்டதாக கூறியுள்ளார்.

இத்துயர சம்பவங்களால் நாடே ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியுள்ளது. அவசர உதவிகளை வழங்குமாறு பிரதமர் திருமதி பேகம் காலிதா ஸியா உலக நாடுகளைக் கோரியுள்ளார்.

### பல நாடுகள் கவலை

பல நாடுகளும் அவசர உதவிகளை மேற்கொண்டுள்ளன. இத்துயர சம்பவம் குறித்து உலக நாடுகள் தமது கவலையையும் தெரிவித்துள்ளன [சி]

---

## தமிழீழ கவிஞர்களின் கவிதைத்தொகுப்பு

(சென்னை)

தமிழீழக் கவிஞர்களின் உன்னதக் கவிதைகளை கவிஞரும், திரைப்பட நடிகருமான திரு. விஜயேந்திரன் ஒரே நூலாக தொகுத்துள்ளார்.

இந்நூலை மே மாத முதல் வாரத்தில் சென்னையில் அவர் வெளியிடவுள்ளார்.

இந்நூலில் புலவர் பார்வதிநாதசிவத்தின் கவிதைகளும் இரண்டும் இடம்பெற்றுள்ளன

திரு: விஜயேந்திரன் 1973ல் யாழ்ப்பாணத்தில் எழுதி வெளியிட்ட தனது பேரன் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை பற்றிய வரலாற்று நூலின் புதிய பிரதியை சென்னையில் கடந்த மாதம் வெளியிட்டுள்ளார்.

---

## 'பூரண சுதந்திரம் பெற எமது காலில் நிற்போம்!'

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தில் பெண்கள் ஆண்களைவிட கூடிய தொகையில் உள்ளார்கள். இத்தப் பெண்களிலும் பார்க்க ஆண்கள் தான் தமிழீழ போராட்டத்தில் முன் நிற்கிறார்கள், பெண்களாகிய நாம் ஏன் பின் நிற்க வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி மகளிர் பிரிவு பொறுப்பாளர் ஜெயா நல்லூரில்நடைபெற்ற மேதின விழாவில் கூறினார்;

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது இன்றைய திருநாள் உழைக்கும் வர்க்கத்தின் உரிமையை நிலைநாட்டிய நாள் அந்நாளில் எமது உரிமையை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம். நாம் பூரண சுதந்திரத்தை பெற வேண்டும், எமது சொந்தக்காலில் நிற்க வேண்டும்'' என்றார். (152)

---

## ஹெலிகள் தரையிறங்கின

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமில் நேற்றுமுன் தினம் 4 ஹெலிகள் தரையிறங்கிச் சென்றனவென்றும் இவற்றுக்கு உதவியாக 3 ஹெலிகள். ஒரு அவ்ரோ விமானம் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது: (க)

---

## 'தமிழினப் போராட்டத்தில் அனைவரும் இணையவேண்டும்'

(யாழ்ப்பாணம்]

''எங்கள் மத்தியில் உள்ள முற்போக்காளர்கள், தங்களை மீளாய்வு செய்து இன்றைய தமிழின போராட்டத்துக்கு வலுவை ஏற்படுத்த முன்வர வேண்டும்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்வே பாலகுமாரன் நல்லூரில் நடைபெற்ற மேதின விழாவில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: அந்தக் காலத்தில் அடியார்கள் சித்தர்கள் மரண பயத்தை வெல்வதற்கு, சாவுக்குப் பிறகு என்ன வென்று ஆராய்ந்தார்கள். இன்று 10 வயதிலும் இருபது முப்பது எழுபது வயதில் கூட மரணத்தை பற்றி அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள், இந்த மரண பயத்தை இன்றைய போராளிகள் வென்றுவிட்டனர் மரணபயம் அகன்றால் தான் விடுதலைப் போராட்டதில் நாம் வெற்றிவாகை சூடமுடியும்.

நாம் சரியான முறையில் முன்னேறவில்லை சீதனம் எங்களை விட்டு அகலவில்லை. சிறு சிறு பிணக்குகளுக்காக நாம் வேறுபட்டு நிற்கிறோம். இவைகளைக் களைந்து பக்குவத்தைப்

### பாலகுமார் உரை

பெற்று மனப்பூர்வமாக தமிழின போராட்டத்துக்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.

தென்னிலங்கையில் மேதினங்களை யூ என் பி களியாட்டவிழாவாகவும் மறுபுறம் தொழிலாளர்களே வேறுபடுங்கள் என்று இடதுசாரிகளும் கொண்டாடுகிறார்கள். இந்த இடது சாரிகளில் 1935-ல் ஆரம்பிக்கப்பட்ட சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சியாகி கம்யூனிஸ்ட் கட்சி மாவோ பிரிவாகி மாவோ பிரிவு அல்பேனியா அணி ஜே வி பி. என்று பல அணிகளாக சிதறுண்டு போனதல்லாமல் தேசியஇனப் பிரச்சனையில் இவ் இடதுசாரிகள் தமிழர்களுக்கு என்ன பங்களிப்பை செய்தனர்.

எமது மத்தியில் உள்ள முற்போக்காளர்கள் தங்கள் சிந்தனைகளைப் பரிசிலனை செய்து எமது தமிழீழ போராட்டத்துக்கு உந்து சக்தியாக இணைய வேண்டும்'' என்றார். (152]

---

## அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை வரதா என்பவரின் அடையாள அட்டை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டை இல. 656512415V ஆகும். (152)

---

## ரதோற்சவம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் இரணைமடு கனகாம்பிகைக்குளம் அம்மன் ஆலய ரதோற்சவம் கடந்த சனியன்று இடம்பெற்றது(83)

---

## தமிழ்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(கொழும்பு]

மாத்தளை மாவட்ட தமிழ் பாடசாலைகளில் 127 ஆரம்பகல்வி ஆசிரியர்களும் 17கணித ஆசிரியர்களும் 18 விஞ்ஞான ஆசிரியர்களுக்குமாக மொத்தம் 152 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவிவருகிறது.

இவர்களில் கணித விஞ்ஞான ஆசிரியர்கள் அதியாவசியமாகத் தேவைபடுவதாகவும், புதிய நியமனங்கள் வழங்குவதன் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியுமெனவும் இம்மாவட்ட தமிழ் பாடசாலைகளுக்கான கல்வியதிகாரிதிருஎஸ்.செல்வகுமார் தெரிவித்துள்ளார். [150]

---

## மேதின ஊர்வலத்தில் வான் - லொறி மோதல்

(யாழ்ப்பாணம்)

மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு மருதனார்மடம் சந்திக்கு வந்த லொறியும் வானும் மோதியதில் 7 பேர் காயமடைந்தனர் லொறியில் வந்தவர்களில் காயமடைந்த 3 பெண்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுமுள்ளனர்.

லொறிக்குப் பின்னால் வந்த வானில் வந்தவர்கள் நால்வர் காயமடைந்தனர். கொட்டடியைச் சேர்ந்த மனோரஞ்சிதம் (36 வயது), ரி. மலர், புவனேஸ்வரி [40 வயது) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

மருதனார்மடம் சந்தியில் ஏற்பட்ட வாகன இடர்பாட்டின்போது இவ்விபத்து ஏற்பட்டது. (56]

---

## புலமைப் பரிசில் பரீட்சை மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய 7-ம் அல்லது 8-ம் ஆண்டிலும் புலமை பரிசில் பரீட்சை ஒன்றை நடாத்த கல்விஅமைச்சு துரித முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது

இப்பரீட்சை வழமையான பரீட்சை போலன்றி மாணவர்களின் முழுத் திறமையையும் பரீட்சிக்கும் வகையில் அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## காரைநகர் அகதிகள் பூநகரியில் தஞ்சம்

பூநகரி)

காரைநகரில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகாரணமாக பூநகரிப் பகுதி பள்ளிக்குடா, விருசியோடை, கௌதாரிமுனை, போன்ற பகுதிகளுக்கு 500க்கு மேற்பட்ட அகதிகள் வந்து தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்கள் தங்கள் பெறுமதி மிக்க பொருட்களை எடுத்துவர முடியாத நிலையில் வந்துள்ளதாக தெரிவித்தனர். [23]

---

## ஓமந்தை பகுதியில் விமான தாக்குதல்


[வவுனியா]

வவுனியா ஓமந்தைப் பகுதியில் கடந்த 30ம் திகதி பி. ப. 3-30 மணியளவில் இருவிமானங்கள், இரு ஹெலிகள் இணைந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார். பொதுமகன் ஒருவர் பலியானார். மூவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

வல்லவன் (வைரவப் பெருமாள் பாலசிங்கம்- ஸ்ரேசன் வீதி, ஓமந்தை) என்னும் போராளி வீரமரணமடைந்தார்.

இதேவேளையில் நேற்றுமுன் தினம் காலை 7-40 மணியளவில் கோழியகுளம், கொந்தக்காரன்குளம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விமான தாக்குதலில் கோழியகுளம் பகுதியில் தர்மலிங்கம் என்பவரின் வீடு சேதத்திற்குள்ளானது.

கோழியகுளம் பகுதியில் அன்று பி ப மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் அமுதன் என்பவரின் வீடும் சேதத்திற்குள்ளானது (க)





வரலாறு படைத்த உணர்ச்சிமிகு மேதின பேரணியின் சில காட்சிகள்.

நல்லூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா), செயலாளர் யோகரட்ணம் (யோகி) ஆகியோர் உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்துகொண்ட பெருந்திரளான மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள் — தேவா)

## மன்னாரில் மேதினம்

(மன்னார்)

மன்னாரில் மேதின ஊர்வலம் நேற்றுமுன் தினம் மிகச்சிறப்பாக நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருமலை ஆகிய மாவட்டங்களில் இராணுவத்தினரின் பல்வேறு கெடுபிடிகளினால் இடம்பெயர்ந்து மடுத் தேவாலயத்தில் அகதிகளாக இருக்கும் பொதுமக்களே இப் பேரணியை அரசுக்கு எதிராக மிகத்துணிச்சலுடன் நடாத்தினார்கள். (வி)

## ஆசிரியர் இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தேசிய ரீதியிலான கொள்கைத் திட்டப்படியே எதிர்காலத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

இத்திட்டம் நடைமுறைக்கு வரும்வரை தற்போது வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை ஒரு லட்சத்து 80 ஆயிரம், ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கக்கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார். (பூ)

## மிஸோராமில் புயல்

(புதுடில்லி)

மிஸோராம் மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை வீசிய கடும் புயலினால் 3 பேர் மரணமடைந்துள்ளனர். 6பேர் டு காயமடைந்துள்ளனர். 1200 வீடுகள் சேதமடைந்துள்ளன. (க)

## உளவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அறவழிப்போராட்டக் குழுவினால் நடாத்தப்படும் உளவியல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஐம்பது பேர் பங்கு பற்றுகிறார்கள். வணபிதா வின்சன் பற்றிக் அடிகளார் இக்கருத்தரங்கை நெறிப்படுத்துவார்.

## வீரவணக்கம்

(மட்டுநகர்)

களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினரும், ரேலோவும் இணைந்து மகிளூர் கிராமத்தை சுற்றிவளைக்க முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் வீ. வேங்கை பாலகுமார் [குணரத்தினம் கிரிதரன், பெரியகல்லாறு] வீரமரணமடைந்தார்.

வீரமரணமடைந்த வீர வேங்கைக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (வி)

## விடுதலைப் புலிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழ்-22 நாளை வெளிவருகின்றது.

இவ்விதழில் கடந்த பங்குனி மாதம் மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் மீது 4 நாட்களாக நடாத்தப்பட்ட தாக்குதலின் முழுவிபரமும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அனுமதிப் பத்திரமுறை (பாஸ்) ஏன் அமுல் படுத்தப்படுகின்றது என்பது பற்றிய விளக்கக் கட்டுரையும் மற்றும் பல முக்கிய விடயங்களும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன [வி]

## மட்டு வீதிகளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டு மக்கள் வீடுகளிலே முடங்கிப்போயிருக்கிறார்கள்.

இப்பகுதியில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளும் இந்நடவடிக்கையினால் குழப்பமடைந்துள்ளது

இங்கு படையினரால் கைது செய்யப்படும் தமிழர்களின் சடலங்களே தலைகள் துண்டிக்கப்பட்டு வீசப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதனால் வீதியில் நடமாடவோ வீட்டைவிட்டு வெளியே வரவோ பொதுமக்கள் அஞ்சுகிறார்கள் என்று பி. பி. ஸி. செய்தியாளர் கூறினார். (ரி)

## டீசல் இல்லாமல்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இத்தீவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் பணப்புழக்கத்துக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## பிறப்புப்பத்திர விண்ணப்ப தாரிகளுக்கு ஒருபிரதி வழங்கப்படும்

[மானிப்பாய்]

யாழ். செயலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தற்போது ஒரு பிரதி மாத்திரமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தற்போது பிறப்பு அத்தாட்சிப்பத்திர விண்ணப் பங்களைக் கையேற்கும் கருமபீடத்தில் இலக்கம் தெரிந்த 'ஏ' விண்ணப்பமானால் 5 ரூபா முத்திரையும், இலக்கம் தெரியாத 'பீ' விண்ணப்பமானால் 10 ரூபா முத்திரையும் ஒட்டுமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [71]

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

இப்பகுதியிலுள்ள குரங்குப் பாலம் என்னும் இடத்தில் அமைந்துள்ள கடற்படைத் தளத்திலுள்ள பாதுகாப்பு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் கடும் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் அதிகாரிகள் உட்பட எட்டுப்படையினர் கொல்லப்பட்டதுடன் பத்துப் பேர் படுகாயமடைந்தனர் என்று சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி]

## சனசமூக நிலையங்களுக்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பரிசீலனை செய்யாது சனசமூகநிலையங்களுக்கு வழங்குமாறும், 1990ம் ஆண்டுக்கான நன்கொடைப் பணத்தை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசுக்கமைய வழங்கும்படியும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது (109)

## அரசு - புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்;

அவர் மேலும்பேசும் போது கூறியதாவது; வடக்கு-கிழக்கில் மக்கள்படும் இன்னல்களை உணர்ந்து இருபகுதியினரும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு பிரச்சனைகட்கு தீர்வுகாண வேண்டுமென்றார்.

## விரைவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கே. சண்முகநாதன் பணித்துள்ளார்.

தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கங்கள் சில 38ம் கட்ட உலர் உணவை விநியோகித்து இருப்பதால் இப்பொருள்கள் பெற்றவர்களின் புள்ளிவிபரங்களைப் பெற்ற பின்னரே ஏனைய தீவுப்பகுதி மக்களுக்கு இவ் விநியோகம் இடம்பெறும் என்றும் அவர் மேலும் கூறினார். (152)

## பச்சை நூல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 29-ம் திகதி இம் முகாமிற்கு சென்ற படையினர் பொதுமக்களாகிய, அ. சுப்பிரமணியம் (வயது 50) த. ஜெயராசா வயது 39), த. லலிதராசா (வயது 38] ம. அருந்தவராசா (வயது 28). விநாயகமூர்த்தி ஆகிய ஐவரை கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்

இதேநேரம் கைமுந்தான் இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினருடன் இணைந்து முஸ்லீம் ஊர்காவற் படையினரும் வெளியே வந்து 40 ஆடுகள் உட்பட 47 கால் நடைகளையும், 3 தண்ணீர் பம்புகளையும் களவாடிக் கொண்டு முகாமுக்குள் கொண்டு சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. [வி]

## கிழக்கிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்,

இராணுவத்தினரின் முகாம்கள் பல இடங்களில் இருக்கின்றபோதிலும் இப்பகுதியில் விடுதலைப் புலிகளும் பலமான நிலையிலிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் ஜூன் மாதத்திற்குள் இராணுவ நடவடிக்கை பூர்த்தியானால்தான் வடபகுதிக்கு இப்பகுதியிலிருந்து பெருந்தொகையான துருப்புக்களை அனுப்பப்போவதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரம் ஆறுமுகம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியில் வசித்து வந்தவருமான திருமதி சிதம்பரம் ஆறுமுகம் காலமானார். இவர் காலஞ்சென்ற கோவிந்தர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும். முருகேசு [இளைப்பாறிய தபாலதிபர், வண்ணார்பண்ணை, கந்தளாய்], அவர்களின் அன்புத் தாயாரும், சிவசோதியம்மாவின் அன்பு மாமியாரும், ரவீந்திரன் [எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்], நந்தகுமார் [இரண்டாம் வருடம், விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்], சிறீதரன் [யாழ். இந்துக்கல்லூரி] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [3-5-91] வெள்ளிக்கிழமை பி. ப. மூன்று மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
ஆ. முருகேசு
(சி 4703)

## விடுதலைப்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார்கள்.

தாண்டிக்குளம் முகாமிலிருந்து வெளியேவந்த இராணுவத்தினர் பொதுமக்களை கேடயமாக வைத்து 3 ஹெலிகொப்டர்கள் தாக்குதல்களின் உதவியுடன் முன்னேறினர்.

இம்முகாமிலிருந்து வெளியேறியபடையினர்மீது பேயாடிக்கூழாம் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகள் கடும்தாக்குதலை நடத்தினார்கள்.

இரு பகுதியினருக்கிடையேயும் காலை 10-15 மணியில் இருந்து 11-15 மணி வவர சண்டை நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து, பேயாடிக்கூழாம் சந்தியில் படையினர் தற்போது நிலை கொண்டுள்ளனர்

இத்தாக்குதலின்போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. [வி]

## பொதுமக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்'களை அந்தப்பெட்டிகளில் ஒட்டி, பின்பு இராணுவ வாகனங்களில் ஏற்றிவிடுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த இராணுவத்தினருடன் வரும் சில தமிழ்பேசும் இளைஞர்கள், விவசாயிகளின் வீடுகளில் இருக்கும் புகையிலையையே திருடுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் புகையிலையை, அந்த வீடுகளில் இருக்கும் பாய்களில் வைத்துக்கட்டி, இராணுவத்தினரின் வண்டிகளில் ஏற்றிவிடுவதாகவும் கூறப்படுகின்றது. [வி]

## 1, 282 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சின் செயலாளர் வோல்டர் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினார்.

இச்சண்டையின்போது 480 அரச படையினர் காணமல் போய்விட்டதாகவும் அவர் மேலும் கூறினார். [ரி]

## பல கட்டடங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், கட்டிடங்களையும் இராணுவத்தினர் குண்டு வைத்தும், புல்டோசரினாலும் தகர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [59]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Regosteted as a News Paper at the General Post office Lankaunder Licence numper B/100306/81.